மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, இவர்களை தேர்வு செய்ததன் நோக்கம் மகளிர்களுக்கு தையல் மற்றும் எம்ப்ராய்டரி பயிற்சி அளிக்க ஏற்கனவே நியமிக்கப்பட்டார்கள். 20 ஆண்டுகளுக்கு முன்னர் மகளிர் மன்றங்களுக்கு அளிக்கப்பட்ட தையல் இயந்திரங்கள் திருப்பிக் கொடுக்கப்படாத நிலையில், அந்தத் திட்டம் ஏற்கனவே அரசால் கைவிடப்பட்டதால், அவர்கள் அந்த வேலைகளைப் பார்க்க இயலாமல் வேறு பணிகளில் அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். சிறு சேமிப்புத் திட்டம், குடும்ப நலத்திட்டம், சத்துணவுத் திட்டம், கண்சிகிச்சை முகாம் மற்றும் இவைகளுக்கான பதிவேடுகளைத் தயாரிக்கும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள். 26-6-1988 ஆம் தேதியிட்ட ஊரக வளர்ச்சித் துறை நிலையாணை 497-ல் தையல் ஆசிரியர்கள் பதவியை ஊரக மகளிர் நல அமைப்பாளர் என்று மாற்றப்பட்டு, அவர்களுடைய சம்பள விகிதம் ரூ. 505-10-555-15-615-20-795-25-845 என்று இருந்து சம்பளம் பெற்று வந்தனர். ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி ரூ.800-15-1,110-20-1,150 என்ற சம்பள விகிதத்தில் அவர்கள் இப்போது பணிபுரிந்து வருகிறார்கள். அவர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள் என்று சொல்கிறார். ஏறத்தாழ 908 தையல் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள், அத்தனைபேரும் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் அல்ல. 190 பேர்கள் மட்டும் எஸ்.எஸ்.எல்.சி. தகுதி பெற்றவர்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. இராமசாமி: தலைவர் அவர்களே, அவர்களுக்கு ஊதியம் மற்றும் மாற்று வேலைகள் கொடுக்கப்பட்டதாக அமைச்சர் பெருமகனார் அறிவித்து இருந்தாலும், அதை நிரந்தரமாக உத்தரவாதப்படுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, அனைத்து துறைகளிலும் இருப்பவர்களை அரசு ஊழியர்களாக்குவது என்றால் நாம் தான் அவர்களை சுமக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியங்கள் நலிவுற்ற நிலையில் இருக்கும் நிலையில் மற்ற நிலைமைகளைப் பார்க்கும்போது, இது ஒன்றும் குறைந்த சம்பளமாக நான் கருதவில்லை. எனவே, இந்தப் பணியில், இந்த சம்பளத்தில் அவர்கள் நிச்சயம் தொடர்ந்து நீடிப்பார்கள்.

பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துதல்.

*3090 திரு. சோ. பால்ராஜ்:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை மத்திய பேருந்து நிலையமான பெரியார் பேருந்து நிலையத்தினை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

1990 மே 10]

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே (அ) மற்றும் (ஆ): மதுரை மத்திய பேருந்து நிலையத்தின் அருகில் உள்ள கிருத்துவ புதைகுழி இடத்தை பேச்சு வார்த்தையின் அடிப்படையில் பெற்று, பெரியார் பேருந்து நிலையத்தினை விரிவுபடுத்த மதுரை மாநகராட்சி மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது. மதுரை ஆர்.சி. டயோசிஸ் கடைக்கு மாற்று இடம் வழங்கியவுடன் மதுரை மத்திய பேருந்து நிலையமான பெரியார் பேருந்து நிலையம் விரிவுபடுத்தப்படும்.

திரு. சோ. பால்ராஜ்: தலைவர் அவர்களே, மதுரையில் இருக்கும் மத்திய பேருந்து நிலையமான பெரியார் பேருந்து நிலையத்தில் நீண்ட காலமாக சிறிது மழை பெய்தாலும் தண்ணீர் தேங்கி போக்குவரத்து தடைபடுகிற நிலை இருப்பதை நாம் அனைவரும் அறிவோம் அப்படிப்பட்ட நிலைக்கு ஒரு முடிவு காண கிருதுமால் நதித் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுப்பதுடன், கல்லறை திடலைச் சேர்ந்தவர்களிடம் உடனடியாகப் பேசி பேருந்து நிலையத்தை சீர் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, மத்திய பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துகிற திட்டம் நம்முடைய அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதன் அருகில் உள்ள கிறித்துவ புதைகுழி இடத்தில் 37,378 சதுர அடி இடம் தேவைப்படுகிறது. இதை மதுரை மாநகராட்சி அரசின் மூலம் அவர்களிடத்தில் தற்போது பேசி வருகிறது. சென்னை நில நிர்வாக ஆணையர் அவர்களுடைய ஒப்புதலுக்கும் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சிபாரிசு செய்துள்ளார்கள். ஒப்புதல் பெற்றவுடன், இதை விரிவுபடுத்துகிற திட்டம் அமல் நடத்தப்படும்.

9-40 மணி

திரு. சோ. பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, பெரியார் பேருந்து நிலையத்தின் கிழ்புறம் மேலப்பெரும் வெளிவீதியின் குறுக்காக ஒரு மேல்பாலம் அமைக்கும் திட்டம் உள்ளதாக அறிகிறேன். அப்படிப்பட்ட திட்டம் மூலமாக மேல் பாலம் கட்டுவதால், பொதுமக்கள் அதை உபயோகப்படுத்துவதற்கு மிகவும் சிரமமாக இருப்பதால், மழைக்காலங்களில் மதுரையில் தண்ணீர் தேங்கி தாழ்வான பகுதியில் மிகவும் கஷ்டப்படுவதால், இதற்கு தீர்வு காணும் முகத்தான் இதற்கு நிரந்தரமான தீர்வு காணும் வகையில், பொதுப்பணித்துறை, உள்ளாட்சி துறை, மற்றும் குடிநீர் வடிகால் வாரியப் பொறுப்பிலுள்ள அமைச்சர் பெருமக்களும், அதிகாரிகளும் கூடிப் பேசி, உடனடியாக மதுரைக்கு ஒரு நல்ல முடிவு காண அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: பேரவைத்தலைவர் அவர்களே தொடர்பில்லா வினா, தனிக் கேள்வி எழுப்பவும்.

திரு எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் இப்போது நான்கு இடங்களில் பேருந்து நிலையங்கள் இருப்பதாகத் தெரிகிறது. திருவள்ளுவர் போக்கு வரத்து பேருந்து நிலையம், நகரப் பேருந்து நிலையம் ,பெரியார் பேருந்து நிலையம், அண்ணா பேருந்து நிலையம் என்று இப்படிப் பல்வேறு இடங்களில் பேருந்து நிலையங்கள் இருக்கின்ற காரணத் தால் பயணிகள் பல்வேறு கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகிறார்கள். எனவே அனைத்தையும் ஒன்றாக இணைத்து எல்லா வசதிக ளோடு சேர்த்து, பேருந்து நிலையங்கள் அமைப்பதற்கான அந்தத் திட்டக் குறிப்பு இருக்கிறதா? அல்லது திருவள்ளுவர் பேருந்து நிலையம் போன்ற பேருந்து நிலையங்கள் தனியாகத் தான் இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: அப்படிப்பட்ட செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் கவனத்தில் இல்லை.

அனுமதியின்றி விசை இறவை மூலம் தண்ணீர் எடுத்தல்.

*2088 திரு ஏ. கணேசமூர்த்தி:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) கீழ்பவானி அணைக்கு வந்துசேரும் தண்ணீரும், அணை யிலிருந்து வெளியேறும் நீரும் அரசு அனுமதியின்றி விசை இறவை மூலம் எடுக்கப்படுவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): விசை இறைவைகளை அனுமதியின்றி வைத்திருப்பது பற்றிய பிரச்சினை அரசின் பரிசீலனையில் உள்ளது. பொதுவாகவே இப்படி அன்—ஆதரைஸ்டு பம்ப்செட்டு கள் கீழ்பவானியைச் சேர்ந்த பகுதியிலேயும், அதுமட்டுமல்லாமல் இன்னும் சேலம் மாவட்டத்திலே ராஜக்கால்வாய், மோகனூர் சேனல், போன்ற பகுதிகளிலேயும் மூலவகை போன்ற பகுதிகளி லேயும் வைத்திருக்கிறார்கள். இதற்கு ஒட்டுமொத்தமாக ஒரு முடிவு எடுக்கவேண்டும். எனவே இதுகுறித்து ஆய்ந்து ஒரு அறிக் கையை அரசுக்கு அனுப்பவேண்டும் என்று தலைமைப் பொறி